1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைசூர் அரசு என்று ஒன்று இல்லை. இருந்தால் அணுகுவோம். (சிரிப்பு).

9–35 மணி

திரு. மா. மணிமாறன் ; மன்னிக்கவும். கர்நாடக அரசாங்கம் இரண்டு தடவை அன்றைக்கும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலம் கடந்த முயற்சி. (சிரிப்பு).

திரு. மா. மணிமாறன் : எனவே, உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் தண்ணீர் வந்தாலும் அங்கு தேங்குகிறது; மழை பெய்கின்ற நேரத்தில் உடனடியாகத் தண்ணீர் தேங்குகிறது. வருகின்ற தண்ணீரும் தேங்குகிறது. பல இலட்சம் ஏக்கர் பாழ்பட்டு ஆண்டுக்காண்டு இதே தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக உடனடியாக உலக வங்கியிலிருந்து நிதியைப் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், சென்ட்ரல் வாட்டர் கமிஷனிடமிருந்து பிறகு டெக்னிக்கல் கமிட்டிக்குச் சென்று, இப்போது அது பிளானிங் கமிஷனிலே இருக்கிறது. பிளானிங் கமிஷனுடைய பரிந்துரை கிடைத்த பிறகு, அது அமைச்சரவைக்குச் சென்று பிறகுதான் நமக்குக் கிடைக்கும். எனவே அதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மின் அழுத்தக் குறைவு

*1900—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடக்கன்குளம் இராதாபுரம் தொகுதி காவல்கிணறு பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் மின்சாரம் முழுமையாக தடைபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நடவடிக்கை எடுத்து தடையில்லாமல் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

TRUTH ALONE TRIUMPHS

[1990 மார்ச் 24

(ஆ) இப் பகுதிகளில் சீரான மின் அழுத்தம் பராமரிக்கப் படுவதற்காக புதிய இரு மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று மின்மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கியுள்ளன. இப்பகுதி களில் மின் தடைகளை தவிர்ப்பதற்காக பனகுடி கேப்- (லெவஞ்சிபுரம்) இருப்புப்பாதை பகுதியில் மேலும் ஒரு புதை மின்வடம் (Underground Cable) போடப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இத்தனை முயற்சிகளை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் இங்கே கேள்வி யிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்த காவல்கிணறு பகுதியிலே தான் மகேந்திரகிரி இருக்கிறது. ராக்கெட் ஆராய்ச்சி நிலை யமும் அங்கேதான் இருக்கிறது. எனவே, வருங்காலத்திலேயும் அதிகமாக மின்சாரம் தேவைப்படுகிற காரணத்தினாலே பக்கத் தில் வர இருக்கின்ற கூடங்குளத்தை விரைவு படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது குறித்து அரசு முயற்சிக்கும்.

கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டு பகுதிகளை விரிவு படுத்துதல்

*2087—திரு. ஏ. கணேசமூர்த்தி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்பவானி பாசனத்தின் ஆயக்கட்டுப் பகுதி தற் போது விரிவாக்கப்பட்டு அதிகமான நிலப்பரப்பிற்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலத்திற்கு விரிவாக் கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கீழ்பவானி திட்டத்தில் புதியதாக 20,419 ஏக்கர் நிலங்களை சேர்ப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள் ளது.

திரு. ஏ. கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசன ஆயக்கட்டு 2 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் என்றாலும், கடந்த 35 ஆண்டுகளில் அதிலே